**சுருக்கம்**

தொடக்கக் கல்வி – நீதிமன்றத் தீர்ப்பாணைகள் – 01.06.88க்கு முன்பு இடைநிலை ஆசிரியர்களாகவும், தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்களாகவும் மற்றும் நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களாகவும் பணியாற்றியவர்கள் – மொத்த பணிக்காலத்தையும் கணக்கிட்டு 1.6.88 அன்று நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியில் தேர்வுநிலை / சிறப்புநிலை அனுமதித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (ஜி1) துறை

அரசாணை (நிலை) எண்.146

நாள் 19.06.2012
திருவள்ளுவராண்டு – 2043
ஆனி–5

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.210, பள்ளிக் கல்வி (ஜி1) துறை, நாள் 14.08.2009
2. அரசாணை (நிலை) எண்.190, பள்ளிக் கல்வி (ஜி1) துறை, நாள் 12.07.2010
3. அரசாணை (நிலை) எண்.230, பள்ளிக் கல்வி (ஜி1) துறை, நாள் 10.08.2010
4. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.13907/எல்1/டி1/ 2011, நாள் 23.05.2011 மற்றும் 23.05.2012

---

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடுத்து தீர்ப்பாணை பெற்ற 65 நடுநிலைப் பள்ளி பட்டதாரி தலைமை ஆசிரியர்களுக்கு, அவர்கள் 01.06.1988க்கு முந்தைய இடைநிலை ஆசிரியர் மற்றும் தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் பணிக்காலத்தை (31.05.1988 முடிய) கணக்கிட்டு 01.06.1988 முதல் நடுநிலைப் பள்ளி பட்டதாரி தலைமையாசிரியர் பணியில் சிறப்புநிலை அனுமதித்து, நடுநிலைப் பள்ளி பட்டதாரி தலைமையாசிரியருக்கான சிறப்பு நிலையில் ரூ.2200–75–2800–100–4000 என்ற ஊதிய விகிதத்தில் ஊதிய நிர்ணயம் செய்திட அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மேலே 2–ல் படிக்கப்பட்ட அரசாணைக்கு திருத்தமாக, இந்நேர்வில் அரசுக்கு ஏற்படும் பெரும் நிதிச்சுமையை கருத்தில் கொண்டு இவ்வரசாணை வெளியிடப்படும் நாள் வரை நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து குறிப்பான ஆணை பெற்றவர்களுக்கு மட்டும் (restricted to those persons who have got specific order of the Court) அரசு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிட்டவாறு 01.06.1988க்கு முந்தைய இடைநிலை ஆசிரியர் மற்றும் தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் பணிக்காலத்தை (31.05.1988 முடிய) கணக்கிட்டு

01.06.1988 முதல் நடுநிலைப் பள்ளி பட்டதாரி தலைமையாசிரியர் பணியில் தேர்வுநிலை / சிறப்புநிலை அனுமதித்து, நடுநிலைப் பள்ளி பட்டதாரி தலைமையாசிரியருக்கான தேர்வுநிலை / சிறப்பு நிலையில் முறையே ரூ.2000–60–2300–75–3200 / ரூ.2200–75–2800–100–4000 என்ற ஊதிய விகிதத்தில் ஊதிய நிர்ணயம் செய்ய தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

3. இந்நிலையில், ஓய்வு பெற்ற அலுவலர் சங்கத்தினர், மேற்காண் அரசாணைகளின் பலன்களை வழக்குத் தொடுத்து தீர்ப்பாணை பெற்றவர்கள் மற்றும் தொடராமல் உள்ளவர்கள் ஆகிய அனைவரும் பெறுகின்ற வகையில் ஒரு பொதுவான அரசாணை வெளியிடுமாறு அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

4. தொடக்கக் கல்வி இயக்குநர், மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் அரசாணை (நிலை) எண்.210, பள்ளிக் கல்வி (ஜி1)த் துறை, நாள் 14.8.09 மற்றும் அரசாணை (நிலை) எண்.190, பள்ளிக் கல்வி (ஜி1)த் துறை, நாள் 12.7.10–ன் படி தேர்வுநிலை / சிறப்புநிலை அனுமதிக்குமாறு சுமார் 260 ஆசிரியர்கள் வழக்கு தொடுத்து சாதகமாக காலக்கெடுவுடன் கூடிய தீர்ப்பாணை பெற்றுள்ளதாக தெரிவித்து, மனுதாரர்கள் அனைவருக்கும் மேற்கண்ட அரசாணைகளின் பலனை பெறும் வகையில் 1.6.88ல் தேர்வுநிலை / சிறப்புநிலை அனுமதித்து ஊதிய நிர்ணயம் செய்தால் கீழ்க்கண்டவாறு செலவினமாகும் எனத் தெரிவித்து, மேற்கண்ட அனைவரும் பயன்பெறும் வகையில் ஒரு பொதுவான அரசாணை பிறப்பிக்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டார்.

| வ.எண் | 1.6.88ல் நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களாக பணிபுரிந்து ஓய்வு பெற்ற காலம் | வழக்கு தொடுத்து தீர்ப்பாணை பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை | ஒரு ஆசிரியர் பெறும் தொகை ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | 1.06.88 முதல் 31.3.1993 முடிய காலத்தில் ஓய்வு பெற்றோர் | 60 | 1,90,000 | 1,14,00,000 |
| 2. | 1.6.88 முதல் 31.5.1994 முடிய காலத்தில் ஓய்வு பெற்றோர் | 50 | 1,75,000 | 87,50,000 |
| 3. | 1.6.88 முதல் 31.7.1994 முடிய காலத்தில் ஓய்வு பெற்றோர் | 100 | 2,51,250 | 2,51,25,000 |
| 4. | 1.6.1988 முதல் 31.9.1994 முடிய காலத்தில் ஓய்வு பெற்றோர் | 50 | 3,07,500 | 1,53,75,000 |
| | மொத்தம் | 260 | – | 6,06,50,000 |

5. அரசு தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் ஆய்வு செய்து அதனை ஏற்க முடிவு செய்துள்ளது. அதன்படி, அரசாணை (நிலை) எண்.210 பள்ளிக் கல்வி (ஜி1)த் துறை, நாள் 14.8.09 மற்றும் அரசாணை (நிலை) எண்.190 பள்ளிக் கல்வி (ஜி1)த் துறை, நாள் 12.07.2010–ன் பலன்களை வழக்கு தொடுத்து தீர்ப்பாணை பெற்ற 260 ஊராட்சி/நகராட்சி/அரசு மற்றும் நிதியுதவி பெறும் பள்ளி ஆசிரியர்களும் பெறும் வகையில் நீட்டித்து 1.6.88க்கு முன்பு (31.5.1988 முடிய) இடைநிலை ஆசிரியர்களாகவும், தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்களாகவும், நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களாகவும் பணியாற்றிய மொத்த பணிக்காலத்தையும் கணக்கிட்டு 1.6.88 அன்று நடுநிலைப் பள்ளி பட்டதாரி தலைமை ஆசிரியர் பணியில் தேர்வுநிலை / சிறப்புநிலை அனுமதித்து ஊதியம் நிர்ணயம் செய்திட தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.337/DS(KM)/12 நாள் 19.6.2012ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள்,
(தொடக்கக் கல்வி இயக்குநர் வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
கருவூல கணக்கு அலுவலர், சென்னை–15.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்,
(தொடக்கக் கல்வி இயக்குநர் வழியாக)
<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–9.
நிதி (கல்வி–II, சிஎம்பிசி) துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வி (எஸ் / வரவு செலவு) துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்படுகிறது//

பிரிவு அலுவலர்
19/6/12